தனிச்சுற்றுக்கு மட்டும்
பதிப்பு 03 | ஜனவரி-மார்ச் 2020

# FINANCIAL Insights

Powered by CRK Financial Solutions

# மியூச்சுவல் ஃபண்ட் முதலீடு செய்கின்றீர்களா




FINANCIAL SOLUTIONS
PATHWAY TO PROSPERITY
CRK FINANCIAL SOLUTIONS
www.chequeleaf.com

## அன்பு நண்பர்களே,



உங்கள் அனைவருடனும், இந்த மடல் வழியே உரையாடுவது மகிழ்ச்சி அளிக்கிறது. உங்கள் அனைவருக்கும் எங்களின் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துகள். நாம் எதிர் கொள்ளும் இந்த புத்தாண்டு 2020 நம் அனைவருக்கும் மிக முக்கியமானதாக அமையட்டும். ஒவ்வொரு புத்தாண்டின் போதும் நாம் புதியதாக சில தீர்மானங்களைச் செய்து கொள்வோம். அது நம் நல்வாழ்வுக்காகவும், சிறந்த எதிர்காலத்துக்கானதாகவும் அமையும். அது போன்றே, இந்த புத்தாண்டிலும் மேற்கொள்வோம். உங்களின் நலம் விரும்பியாக, உங்களுக்கான நிதி மேலாண்மை ஆலோசகராக சில தீர்மானங்களை உங்களுக்குப் பரிந்துரைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

### தீர்மானம் #1: குடும்ப வரவு செலவுக்கான BUDGET

வருடத்திற்கான வரவு செலவினைத் திட்டமிட்டு செய்யும் நடவடிக்கையினை தவறாது செய்தல். வருடத் தொடக்கத்தில் ஆண்டுக்கான பட்ஜெட் எழுதிக் கொண்டு, அதனை அடிப்படையாகக் வைத்து ஒவ்வொரு மாதமும் குடும்ப வரவு செலவுக்கான பட்ஜெட் தயார் செய்து அதன்படி செயல் படுதல்.

### தீர்மானம் #2: செலவுகளைக் குறைத்தல்/கட்டுப்படுத்துதல்

தினசரி நாம் செய்யும் செலவுகளை விபரங்களுடன் எழுதி, அதனை கூர்ந்து கவனித்து எந்த செலவுகள் மீண்டும் மீண்டும் வருகின்றன என்பதையும் அவை அவசியமானதா அல்லது தவிர்க்க கூடியதா என கவனித்து அதற்கு ஏற்ப திட்டமிடுதல்.

### தீர்மானம் #3: குறுகிய கால கடன்களை அடைப்பதில் கவனம் செலுத்துதல்

குறிப்பாக கடன் அட்டை மூலம் பொருள் வாங்கிச் செலுத்தும் மாதாந்திர தவணைகளை சரிவரக் கவனித்து, அவற்றை கொஞ்சம் கொஞ்சமாக அசலைச் செலுத்தி வர நடவடிக்கை எடுத்தல். இதனால் இந்த தவணைகளுக்குச் செலுத்தும் வட்டியினால் உண்டாகும் சுமை குறைந்து சேமிப்பு பெருகும்.

### தீர்மானம் #4: AUTOMATIC TRANSFER வசதியை பயன்படுத்துதல்

நமது சேமிப்புகளை நாமே சில குறிப்பிட்ட நாளில் செலுத்துவதைத் தவிர்த்து வங்கிகள், நிறுவனங்கள் வழங்கும் *automatic transfer* வசதியினைப் பயன்படுத்தி நமது மாதாந்திர சேமிப்புப் பழக்கத்தினை உறுதி செய்து கொள்வது. இந்த பழக்கத்தால் தொடக்கத்தில் சிரமம் போலத் தெரிந்தாலும், அதனால் கிடைக்கும் நன்மைகள் அதிகம்.

### தீர்மானம் #5: சவால்களுக்கான சேமிப்பு

ஒவ்வொருவருக்கும் எதிர்பாரத செலவுகள் மட்டும் எதிர்பாராத சவால்கள் வாழ்வில் சகஜமாக வரும். இதனைக் கருத்தில் கொண்டு, இதனை எதிர்கொள்ள தனியே சேமிக்க வேண்டும். இப்படி சேமிக்கப்படும் நிதியினை, கவனமுடன் கையாள வேண்டும். திடீர் பயணங்கள், வருமானம் கிடைக்காத தருணம், அல்லது வேலை இழக்கும் தருணம் போன்ற சந்தர்ப்பங்களில் இப்படி சேமிக்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்து சவாலான தருணங்களைச் சமாளிக்கலாம்.

### தீர்மானம் #6: நிகழ்காலம், எதிர்காலம் கருதி சேமித்தல்

எல்லாவற்றுக்கும் கவனம் கொடுப்பது. நமது நிதி மேலாண்மை என்பது, நிகழ்காலம் எதிர்காலம் என்ற இரண்டுக்கும் ஆனது. வாழ்வில் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வயதிலும் நம் கடமை, பொறுப்பு மாறுபடும். அது போலவே நாம் பொருள் ஈட்டும் திறனும் வாய்ப்பும் மாறுபடும். இதனைக் கருத்தில் கொண்டு நம் பொறுப்புகள் அனைத்துக்கும் கவனம் கொடுத்து நம் சேமிப்பு பழக்கங்கள் அமைய வேண்டும். உதாரணமாக பிள்ளைகளின் கல்வி, திருமணம், கேளிக்கை, விழாக்கள் , பண்டிகைகள், ஓய்வு கால வாழ்க்கை, மருத்துவ காப்பீடு என பல வகையிலும் சிந்தித்து நம் சேமிப்பு அமைய வேண்டும்.

**நமது அடுத்த மருத்துவமுகாம் வரும் 2020 ஜனவரி மாதம் 25-ம் நாள், சனிக்கிழமை நடைபெறவுள்ளது.**

**We're Social**

+91 99416 06398

username

CRK Financial Solutions



*Do you know?* CAGR - Compounded Annual Growth Rate



**Mr.T R Krishnamurthy**
*Chartered Accountant*
**catrkauditor@gmail.com**

# அயல் நாட்டில் வசிக்கும் இந்தியரின் (NRI) வங்கிக் கணக்குகள்

அயல் நாட்டில் வசிக்கும் எந்த ஓர் இந்தியருக்கும் இருவகை வங்கிக் கணக்குகளை இயக்கும் உரிமை உண்டு. அயல் தேசத்தின் நாணயத்திலும், இந்திய நாணயத்திலும் இயங்கும் வண்ணமாக அவர்கள் இருவகை வங்கிக் கணக்குகளை அதற்கென அங்கீகாரம் பெற்ற வங்கிகளில் இயக்கலாம்.

அவை *Non-Resident Ordinary Account (NRO Account)* என்பதும் *Non-Resident External Account (NRE Account)* என்பதும் ஆகும்.

*NRO Account* என்பது அயல் நாட்டில் வசிக்கும் இந்தியரால் இந்தியாவில் உள்ள வங்கி ஒன்றின் இந்தியக் கிளையில் இயக்கப்படும் வங்கிக் கணக்கு ஆகும். இந்த வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் பணம் இந்தியாவிலிருந்து மட்டுமே பெறப்பட்டதாக இருக்கும். அயல் தேசத்திலிருந்து இந்த வங்கிக் கணக்கில் பணம் செலுத்த இயலாது. இந்த வங்கிக் கணக்கின் பரிவர்த்தனைகள் அனைத்தும் இந்திய நாணயத்தில் மட்டுமே இயங்கும்.

இந்த *NRO Account* மூலம் சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கு, தொடர் முதலீட்டுக் கணக்கு, நிரந்தர முதலீட்டுக் கணக்கு எனும் வகையில் அயல் நாட்டில் வசிக்கும் இந்தியர் எவரும் கணக்கு தொடங்கலாம். இந்தியர் அயல் நாட்டில் வசிக்கும் காலத்தில் அவருக்கு இந்தியாவில் கிடைக்கும் வருவாய் அல்லது முதலீடுகளை இந்திய நாணயத்தில் கையாள இந்த கணக்கு உதவும்.

அயல் நாட்டில் வசிக்கும் உதாரணமாக இந்தியர் ஒருவர் தனது வீட்டுக்கான வாடகை போன்ற வருவாயினை இந்தக் கணக்கில் பெற்றுக் கொள்ளலாம் .மேலும் அவர் இந்தியாவில் செய்துள்ள முதலீடுகளின் மூலம் ஈட்டும் வட்டி, பங்குத் தொகை போன்ற வரவுகளைப் பெற இந்த வகை வங்கிக் கணக்கு பயன்படும்.

*NRO Account* கொண்டிருக்கும் அயல் தேசத்தில் வசிக்கும் இந்தியர் அந்த கணக்குக்கான வாரிசு நியமிக்க உரிமை உண்டு. அந்தக் கணக்கை இன்னொருவருடன் இணைந்து இயக்கும் வண்ணமாகவும் அவர் அமைத்துக் கொள்ளலாம். அவருடன் இணைந்த அந்தக் கணக்கை இயக்க அவர் விரும்பும் நபர் அவரது நெருங்கிய உறவினராக இருப்பது கட்டாயம். இந்தக் கணக்கில் ஈட்டும் வட்டி போன்ற வருவாய்க்கு இந்திய வருமான வரிச்சட்டத்தின் படி வரி செலுத்த வேண்டும் ஒரு *NRO Account* லிருந்து இன்னொரு *NRO Account* க்கு பணம் பரிவர்த்தனை செய்து கொள்ள அனுமதி உண்டு. ஆனால் *NRO Account* லிருந்து *Non-Resident External Account (NRE Account)* பணம் பரிவர்த்தனை செய்ய இந்திய ரிசர்வ் வங்கியின் அனுமதி பெற வேண்டும்.

இந்தியாவில் வசிக்கும் ஒருவர் அந்த காலத்தில் தொடங்கப்பட்ட வங்கிக் கணக்கினை தான் அயல் தேசத்திற்கு மாற்றல் ஆனபின்பு *NRO Account* ஆக மாற்றுவது கட்டாயம். அப்படி மாற்றாமல் இயல்பான உள்ளூர் கணக்காக கையாண்டால் அது குற்றமாகும். மேலும் அப்படிக் கையாள்வதற்கு அபராதமும் விதிக்கப்படும்.

*Non-resident External Rupee Account (NRE account)* என்பது அயல் தேசத்தில் வசிக்கும் இந்தியர் தான் அயல் தேச நாணயத்தில் பெறும் வருவாயினை முதலீடு செய்யத் தகுந்த வங்கிக் கணக்காகும். அயல் தேசத்தில் வசிக்கும் இந்தியர் தனது இந்தியப் பயணத்தின் போது இந்த வங்கிக் கணக்கில் அயல் நாட்டு நாணயத்தில் பணம் செலுத்தலாம். ஆனால் இந்திய நாணயத்தில் பணம் செலுத்த இயலாது.

*NRE account* லிருந்து *NRO Account* க்கு பணம் பரிவர்த்தனை செய்யலாம் . இந்தக் கணக்கில் இருக்கும் மொத்த தொகையினை இந்தியக் கணக்கிற்கு மாற்றிக் கொள்ள வழி உண்டு. இந்தக் கணக்கில் ஈட்டப்படும் வட்டி போன்ற வருவாய்க்கு வருமான வரி விலக்கு இந்திய வருமான வரிச் சட்டம் ஷரத்து 10 உப பிரிவு 4ன் படி வழங்கப்பட்டுள்ளது.

> கொன்றை வேந்தன்: ஔவையார்
>
> **அஃகமும் காசும் சிக்கெனத் தேடு**
>
> விளக்கம் :
> சிக்கனமாயிருந்து தான்யத்தையும், செல்வத்தையும் தேட வேண்டும்.



**Mr.R.Gopinath., CEO**
*Gopast Centre for learning Pvt Ltd*

# எது
# சிறந்த முதலீடு

*"Regularity is the key to wealth, not ROI"!*

நான் கலந்து கொள்ளும் கூட்டங்கள், உரையரங்குகள், கருத்து அரங்குகள், ஆலோசனைக் கூட்டங்கள் இங்கெல்லாம் என்னிடம் முன் வைக்கப்படும் முக்கிமான கேள்வி ஒன்று உண்டு.

"எது சிறந்த முதலீடு ?"

இதற்கு நான் எப்போதும் ஒற்றை வரியில் பதில் சொல்வதில்லை. என் பதிலில் மூன்று முக்கிய வாக்கியங்கள் உண்டு.


1. சிறந்த முதலீடு என்பது ஒற்றை முதலீடு அல்ல
2. அது ஒரு கலவை
3. அப்படி ஒரு கலவையும் நிரந்தரமானது அல்ல, மாறிக் கொண்டே இருக்கும்.

விபரமாகவே சொல்லுகின்றேன். ஆங்கிலத்தில் *An apple a day keeps doctor away* என்பதாக ஒரு சொல் வழக்கு உண்டு. உடல் ஆரோக்கியத்துக்காக சொல்லப்பட்ட வாக்கியம் அது. அதாவது தினசரி ஒர் ஆப்பிள் பழத்தை உண்டால் மருத்துவருக்கு அவசியம் இருக்காது என்பது அதன் ஆழ்ந்த பொருள். அது ஆப்பிள் கனியில் இருக்கும் சத்துக்களையும் ஆப்பிள் சாப்பிடுவதால் கிடைக்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறிக்க உருவான வாக்கியம். ஆனால் ஆப்பிள் மட்டுமே தினசரி உணவாக முடியாது.

ஆப்பிள் நன்மை தரும் கனிதான். அது நம் அன்றாட உணவில் ஓர் அங்கமாக இருக்க வேண்டும். ஆனால் ஆப்பிள் மட்டுமே உணவாக இருந்தால் அது உடல்நலத்தைத் தராது. உடலுக்குத் தேவையான கார்போஹைட்ரேட், மாவுச் சத்துகள், ப்ரோட்டின், நார்சத்துகள் இன்னமும் பல சத்துகள் ஏனைய காய்களில், கனிகளில் பருப்பு வகைகளில் இருக்கிறது. நம் அன்றாட உணவுப் பழக்கத்தில் இவை எல்லாம் இருந்தால் தான் அது ஆரோக்கியமான உணவாக செம்மையான உணவாக செறிவான உணவாக இருக்க இயலும்.

இது போலத்தான் நம் முதலீடுகளும்.

தங்கம் நல்ல முதலீடு. ஆனால் நம் சேமிப்பு முழுவதும் தங்கத்தில் முதலீடு செய்வது ஆரோக்கியமல்ல. பங்குச் சந்தை முதலீடு நல்ல முதலீடு ஆனால் நம் சேமிப்பு முழுவதையும் பங்குச் சந்தையில் முதலீடு செய்வது ஆபத்தானது, நிலம் நல்ல முதலீடு. ஆனால் நாம் பல காலம் சேமித்த பணத்தை நிலத்தில் மட்டும் முதலீடு செய்வது பயன் தராதது மட்டுமல்ல, சிறந்த வழியுமல்ல. வங்கிகளில், அஞ்சலகங்களில், நிதி நிறுவனங்களில் முதலீடு செய்வது நன்மைதான். ஆனால் நம் பணம் முழுமையும் அப்படி முதலீடு செய்வது நல்லதல்ல




முதலீடு செய்யும் போது நம் தேவைக்கு ஏற்ப நம் பொருள் ஈட்டும் தன்மைக்கு ஏற்ப நம் வருமானத்துக்கு ஏற்ப பல வகைகளில் முதலீடு செய்வது நல்ல பழக்கம் . நம் முதலீட்டுக்கான வழியினை நாம் யோசித்துச் செய்ய வேண்டும். அதை விடுத்து பிறரைப் பார்த்து அவர்கள் செய்வது போல செய்யக் கூடாது. நம் அருகாமை வீட்டுக்காரருக்கும் நமக்கும் தலைவலி வந்தால் இருவரும் தனித் தனியே தான் மருத்துவ ஆலோசனை பெறுகிறோம். ஒருவர் மட்டும் மருத்துவரிடம் சென்று உடல்பரிசோதனை செய்து கொண்டு, அவருக்கு மருத்துவர் பரிந்துரைத்த மருந்தை அடுத்தவரும் எடுத்துக் கொள்வதில்லை. நிதி மேலாண்மையும் , சேமிப்பு மேலாண்மையும், முதலீட்டு மேலாண்மையும் இப்படித்தான். ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்க்கை நிலை, வருமானம் ஈட்டும் தன்மை, தேவைகள் இவற்றை ஒட்டி மாறும். இதனைப் புரிந்து கொண்டு முதலீடு செய்ய வேண்டும்

முதலீட்டுக்கு எத்தனை சதவீதம் வருமானம் எந்த காலகட்டத்தில் கிடைக்கும் என்பதை முதலீடு செய்பவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பல நிறுவனங்களில் இருந்து தொலைபேசி வழியாக முதலீடு செய்ய விடுக்கப்படும் வசீகர அழைப்புகளை புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு நீங்கள் யார், என்ன வேலை செய்கின்றீர்கள், நீங்கள் எத்தனை வருமானம் ஈட்டுகின்றீர்கள் என்பது எதுவும் தெரியாது. அவர்களின் அழைப்பு திட்டமிட்டது இல்லை. அதில் எந்த ஆழ்ந்த கணக்கீடுகளும் இல்லை.

விபரமான கணக்கீடுகள் முதலீடு செய்கின்றவர்களின் பொறுப்பு. அப்படி செய்யும் போது, முதலீடு எவ்வளவு பாதுகாப்பானது , அதனால் எப்படி எந்த அளவு வருமான ஈட்ட இயலும், அதனை எப்போது திரும்பப் பெறலாம் எனும் மூன்று முக்கிய அம்சங்கள் கவனிக்க வேண்டும்.



*Do you know?* FIFO - First in, First out

# யூகங்களும்
# உண்மைகளும்

**நான் இளைஞன். நான் ஏன் இப்போதே எனது ஓய்வு கால வருமானத்திற்கு என சேமிக்க வேண்டும். பென்ஷன் என்பது முதியவர்களுக்கானது தானே.**

இந்தக் கேள்வியும் யூகமும் பலவீனமானது. இளமையில் துடிப்புடன் செயல் திறனுடன் வருவாய் ஈட்ட இயலும். அதனால் முதுமைக் காலத்தைக் கணக்கிட்டு அதற்கென நீண்ட கால பயன் தரும் ஓய்வூதியத் திட்டங்களை கண்டறிந்து அதில் முதலீடு செய்வது தான் சிறந்தது. இல்லை எனில் முதுமையிலும் வருவாய் ஈட்டும் கட்டாயம் உருவாகும். அது மிகவும் சிரமமான வாழ்க்கையினைத் தான் தரும்.

**பங்குச் சந்தை உடனடி வருமானம் தருமா?**

மேலோட்டமான பார்வைக்கு பங்குச் சந்தை தினசரி அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும் உடனடி வருமான வழி என தோன்றினாலும் உண்மையில் பங்குச் சந்தை முதலீடு என்பது நீண்ட கால பயனுக்கானது. பங்குச் சந்தையில் முதலீடு செய்தால் அதன் பலனைத் துய்க்க நிதானமும் பொறுமையும் காத்திருக்கும் தன்மையும் அவசியம்.

**வருமான வரிச் சலுகை பெறத்தான் சில முதலீடுகள் செய்ய வேண்டுமா?**

இப்படியான அணுகுமுறை தவறானது. முதலீடுகள் கல்வி, மேற்கல்வி, வீடு, உடல் நலம் பேண , திருமணம் என பலவித காரணங்களுக்காக செய்யப்பட வேண்டும். இப்படி செய்யப்படும் முதலீடுகளுக்காக அரசு வரிச் சலுகை வழங்குகிறது. ஆனால் வரிச் சலுகை என்பதை மட்டும் கருத்தில் வைத்து முதலீடு செய்வது ஆரோக்கியமான முதலீடு அல்ல.

> “ இனியவை நாற்பது: பூதஞ்சேந்தனார்
>
> **அதர் சென்று வாழாமை ஆற்ற இனிதே;**
> **குதர் சென்று கொள்ளாத கூர்மை இனிதே;**
>
> விளக்கம் :
> தவறான வழியிற் சென்று வாழாதிருப்பது இனிது.
> தவறான வழியிற் பொருள் தேடாமை மிக இனிது.

## SIM CARD ஏமாற்றுக்காரர்கள் ஜாக்கிரதை

தற்போது வங்கி மற்றும் பலவிதமான பணப்பரிவர்த்தனைகள் மொபைல் போன்கள் மூலம் நிகழ வசதியும் வாய்ப்புகளும் நடைமுறையில் இருக்கின்றன. ஆனால் இந்த பரிவர்த்தனைகளைப் பாதுகாப்புடன் செய்வது மிக அவசியம். இந்த பரிவர்த்தனைகளில் ஏமாற்றுக்காரர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி நம்மை ஏமாற்றாமல் இருக்க கவனமாக இருப்பது முக்கியம்.

ஏமாற்றுக்காரர்களின் கைவரிசைகள் இப்படி இருக்கும்.

1. போனில் அழைத்து நம் விபரங்களைச் சேகரிப்பார்கள்.

2. நமது மொபைல் ஆப்பரேட்டர்களைத் தொடர்பு கொண்டு இந்த விபரங்களை வைத்துக் கொண்டு போலி ஆவணங்களைக் காண்பித்து நாம் வைத்திருக்கும் சிம்கார்டு எண்ணில் இன்னொரு சிம்கார்டு வாங்குவார்கள். நாம் நம் மொபைலில் வைத்திருக்கும் சிம்கார்டு திடீரென செயல் இழந்து போகும்.

3. இப்போது வங்கி மற்றும் இதர பண பரிவர்த்தனைகளை நம் பெயரில் இயக்குவார்கள். அவர்கள் பெற்றிருக்கும் அந்த புதிய சிம்கார்டு பொருத்திய மொபைலுக்குத் தான் வங்கியின் *OTP* போன்ற எண்கள் அனுப்பப்படும் என்பதால் நம் வங்கிக் கணக்கு ஏமாற்றுக்காரரின் கைக்குப் போய்விடும். அவர் அதிலிருந்து பணம் எடுப்பது நமக்குத் தெரியாமலே போகும்.

இது மாதிரி ஏமாற்றுக்காரர்கள் கைவரிசையில் இருந்து எப்படி பாதுகாப்பாக இருப்பது.

1. நமது மொபைல் எண் எப்போதாவது இயங்காமல் இருந்தால், உடனே நமது மொபைல் ஆப்பரேட்டரைத் தொடர்பு கொண்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.


2. சமூக ஊடகங்களில் நமது மொபைல் எண்ணை பகிரங்கமாக வெளியிடாது இருக்க வேண்டும்.

3. இணையம் வழியாக பணம் பரிவர்த்தனை செய்யும் பாஸ்வேர்ட் , *PIN Number* போன்ற விபரங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக் கூடாது.

4. வங்கிப் பரிவர்த்தனைகள் நடந்தால் வங்கி அனுப்பும் *SMS Alert* & *Email alert* போன்றவை சிறந்த பாதுகாப்பு வழிமுறைகள். ஆகவே அவற்றை எப்போதும் பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

5 .வங்கி கணக்குத் தொடர்பான விபரங்களைக் கேட்டு வரும் போன் அழைப்புகளைத் உடனே துண்டிக்கவும். அதே போல் இது போன்ற விபரங்களைக் கேட்டு வரும் இமெயில்களை, புறக்கணித்து நீக்கவும்.

***Do you know?*** IPO - Initial public offering






*Do you know?* CAS - Consolidated Account Statement

# Financial Trends

| HIGHEST INTEREST RATES ON FIXED DEPOSITS SCHEMES | | |
|---|---|---|
| FD Name | Rating | Interest Rate * (Up to) |
| Shriram Unnati Deposits | MAA+ by ICRA, FAA+ by CRISIL | 8.85% |
| Mahindra & Mahindra Financial Services Ltd | CRISIL FAAA | 8.50% |
| PNB Housing Ltd | CRISIL FAAA | 8.45% |
| Bajaj Finance Ltd | FAAA by CRISIL, MAAA by ICRA | 8.35% |
| ICICI Home Finance | FAAA by CRISIL, MAAA by ICRA | 8.20% |
| Sundaram BNP Paribas Home Finance Ltd. | ICRA MAA+ | 8.00% |
| HDFC Ltd. | FAAA by CRISIL, MAAA by ICRA | 7.76% |

* Highest rate including additional interest for Senior citizens, employees etc. wherever applicable.

* As of December 2019

| FUND PERFORMANCE CHART – OUR FAVORITE EQUITY FUNDS | | | | | |
|---|---|---|---|---|---|
| Fund Name | Category | 1 Year | 3 Year | 5 Year | *NAV |
| Mirae Asset Emerging Bluechip Reg-G | Large & Mid Cap | 13.59 | 16.89 | 16.30 | 57.27 |
| SBI Small Cap-G | Small Cap | 5.50 | 14.11 | 14.66 | 53.03 |
| Axis Focused 25-G | Multi Cap | 14.78 | 19.26 | 13.38 | 31.03 |
| Mirae Asset Large Cap Reg-G | Large Cap | 12.22 | 15.98 | 12.30 | 54.37 |
| Axis Small Cap Reg-G | Small Cap | 17.67 | 13.91 | 11.79 | 31.44 |
| Kotak Standard Multicap Reg-G | Multi Cap | 11.80 | 14.48 | 11.57 | 37.46 |
| Axis Bluechip-G | Large Cap | 18.34 | 20.29 | 11.13 | 32.31 |
| Kotak Equity Opportunities Reg-G | Large & Mid Cap | 11.97 | 12.75 | 10.69 | 127.23 |
| Axis Midcap-G | Mid Cap | 13.00 | 17.42 | 10.63 | 39.51 |
| ICICI Prudential Bluechip-G | Large Cap | 9.37 | 13.19 | 9.56 | 44.59 |
| HDFC Top 100-G | Large Cap | 8.06 | 12.13 | 8.08 | 500.83 |

| FUND PERFORMANCE CHART – OUR FAVORITE DEBT & DYNAMIC FUNDS | | | | | |
|---|---|---|---|---|---|
| Fund Name | Category | 1 Year | 3 Year | 5 Year | *NAV |
| ICICI Prudential Balanced Advantage-G | Hybrid | 10.70 | 10.58 | 9.41 | 38.01 |
| Kotak Low Duration Fund (G) | Debt | 10.06 | 8.52 | 8.79 | 1971.72 |
| LIC MF Banking & PSU Debt-G | Debt | 9.96 | 7.70 | 7.45 | 25.19 |
| ICICI Prudential Asset Allocator (FOF)-G | FoFs | 9.55 | 11.07 | 9.71 | 58.67 |
| ICICI Prudential Regular Savings-G | Hybrid | 9.50 | 9.01 | 9.09 | 45.23 |
| ICICI Prudential Floating Interest-G | Debt | 8.48 | 7.25 | 7.76 | 294.83 |
| Axis Equity Saver Reg-G | Debt | 8.11 | 9.57 | 0.00 | 13.47 |
| HDFC Low Duration-G | Debt | 8.00 | 6.93 | 7.42 | 41.28 |
| SBI Savings-G | Debt | 7.85 | 7.04 | 7.56 | 30.52 |
| HDFC Equity Savings-G | Hybrid | 5.64 | 7.42 | 7.77 | 37.51 |

All Equity funds sorted on 5-year returns. Debt funds ranked on 1-year returns

* NAV as of 19.12.2019




***Do you know?*** NAV - Net Asset Value







**நமது CRK நிறுவனம் கடந்த 22.12.2019 அன்று சென்னை சாலிகிராமத்தில் நடத்திய மருத்துவ முகாம்**







**COT 2019**





**நமது சி ஆர் கே நிறுவனத்தின் திரு ரவி அவர்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் பெருமைமிகு கார்ப்பரேட் க்ளப் விருதினை ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் தலைவர் திரு குமார் அவர்களிடமிருந்து பெறுகிறார்**

## DOWNLOAD NOW

Download on the App Store | GET IT ON Google Play

Our Mywealth app has become

**CRK APP**

now

## வாடிக்கையாளர் குரல்



*“நிதிச் சந்தையின் நிலவரம், எந்த வகையான முதலீடு சிறந்தது எனும் நுட்பமான அறிவு, இத்துடன் வாடிக்கையாளரின் தேவைகளை நன்கு அறிந்து அதனைப் புரிந்து கொண்டு அந்த வாடிக்கையாளருக்கு சிறந்த மூதலீட்டை அமைத்து தருவதற்கு திரு. ரவி மற்றும் அவரது நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவரும் முனைப்புடன் செயல்படுகின்றனர். காலத்தைக் கருத்தில் கொண்டு நேரத்தே அவர்களின் சேவை அமைந்திருப்பது மிக பயனுள்ளதாக இருக்கிறது. அவர்களுடன் நீண்ட நாள் சேவை சார்ந்து இணைந்திருக்க வேண்டும் என்பது என் உளமார்ந்த ஆவல். அவர்களுக்கு என் வாழ்த்துகள்”*

*- Mrs Priya Ganesh*
*Senior Director, Capgemini*



*“என் தந்தைதான் திரு ரவி அவர்களை எனக்கு அறிமுகம் செய்தார். அவரது சேவையின் தரம் மிகச் சிறப்பானது. இப்போது என் மகள்கள் அவரின் வழிகாட்டுதலோடு தான், தங்கள் முதலீட்டினைச் செய்கின்றார்கள். மூன்று தலைமுறைகளாக அவரது சேவை தொடர்கிறது. மலர்ந்த முகத்தோடு எங்களின் எல்லா முதலீட்டு தேவைகளுக்கான சேவையினை எங்கள் இல்லம் தேடி வந்து மனமுவந்து செய்யும் அவரது சேவை நிகரில்லாதது”*

Mr R Govindarajan
Executive Manager, The Sanmar Group

## A NOTE TO OUR DEAR READERS

“Financial Insights” is an investor awareness publication by CRK Financial Solutions. It is being sent to some of you on a complimentary basis as part of our humble effort to ensure that more & more investors are made financially aware so that they get the best from their savings & investments. We sincerely hope that you like the contents of Financial Insights and in some way benefit from the same. Moreover, we would be happy to receive your feedback on the contents of this publication, we request you to please let us know by sending us an email on webmaster@chequeleaf.com. Alternatively, you can even write to us at our office address:

**CRK Financial Solutions, New No 75, Arya Gowda Road, West Mambalam, Chennai 600 033.**


PUBLISHER
**CRK Financial Solutions**
**+91 99416 06398**

EDITOR
**Chandramowleeswaran V**
**+91 98406 56627**

DESIGNER
**Vignesh Krishnamoorthy**
**+91 99529 78900**

PRINTER
**K.N. Madhavachari**
**Annai Designs +91 63803 59197**